


## <u>அரக்கோணம் நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டம்–வேலூர் மாவட்டம்</u>

அரக்கோணம், வேலூர் மாவட்டத்தின் முதல் நிலை நகராட்சியாக சென்னையிலிருந்து 80கி.மீ. தொலைவில் காஞ்சிபுரம்–திருத்தணி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 9.06 ச.கி.மீ. ஆகும். இந்த நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. நகராட்சியின் மக்கள் தொகை 2011–ன்படி 79,029 என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போதைய இடைநிலை மற்றும் உச்சகட்ட மக்கட்தொகை முறையே 82600 (வருடம் 2015), 96000 (வருடம் 2030) மற்றும் 109400 (வருடம் 2045) எனவும் கணக்கிடப்பட்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நகரம் 3 பகுதிகள் மற்றும் ஒரு துணை பகுதியாகப் பிரிக்கப்பட்டு 150 மி.மீ. முதல் 600 மி.மீ. விட்டமுடைய மண் மற்றும் கான்கிரீட் குழாய்கள் (SW/RCC) 69081 மீட்டர் நீளத்திற்கும், 2787 எண்ணிக்கையிலான ஆள்நுழை குழிகள் மற்றும் 12071 வீட்டிணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரதான கழிவு நீர் உந்து நிலையம் காளிவாரிகண்டிகையிலும், 2 துணை கழிவு நீர் உந்து நிலையங்கள் காமராஜ் நகரிலும், சோமசுந்தரம் நகரிலும், 1 ஆள் தூக்கி நிலையம் ஜெய்பீம் நகரிலும், 3 தூக்கி ஆள்நுழை குழிகள் முறையே காந்திநகர், வின்டர்பேட்டை, அன்னைநகர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. 13523 மீட்டர் நீளத்திற்கு 150 மி.மீ முதல் 500 மி.மீ விட்டடுள்ள இரும்பு குழாய்கள் மூலம் துணை கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் பிரதான கழிவுநீர் உந்து நிலையங்களில் சேகரிக்கப்படும் கழிவுநீர் சில்வர்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இடைநிலை மக்கட் தொகையை கணக்கில் கொண்டு 11.04 எம்.எல்.டி. சுத்திகரிக்க ASP தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது.